வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு ஷூ ஆவணி மீ கஎஉ திங்கட்கிழமை

## "ஆங்கிலங் கற்ற மாயாவாதிகள்"

I

இந்த மகுட நாமத்துடன் இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் ஒரு கடிதம் வெளியிடப்பெற்றுள்ளது. அக்கடிதம் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையார் கூடிய சென்ற வருடாந்தக் கூட்டத்திற் படிக்கப்பட்ட அறிக்கைப் பத்திரத்தில் நிகழ்ந்திய ஒரு ஆசங்கையாகுமென்பது அக்கடிதத்தை அவதானத்தோடு படிப்பார்க்குத் தெள்ளிதிற் புலப்படும்.

(1) "ஆங்கிலங் கற்ற மக்கள் சகல மத சித்தாந்தங்களையும் கற்கும் வசதியுடையராயிருக்கவும் அவர்கள் மாயாவாத நூல்களை மாத்திரமே கற்கின்றுரென அறிக்கை கூறுவதன் காரணமென்னையோ"

என்பது குறித்த கடிதரின் ஆட்சேபம். இதில் ஆங்கிலங் கற்ற மக்கள் சகல மத சித்தாந்தங்களையும் கற்கும் வசதியுடையரா யிருப்பவும்........" எனக் கடிதர் கூறுவது பொருந்துமா? எந்தச் சமயநூல் எந்த மொழியில் எழுதப்பட்டிருக்கின்றதோ, அந்த மொழியைச் சந்தேக விபரீதமறக் கற்று நிரம்பிய அறிவுடையவர் கற்கமுடியுமே யொழிய, அந்நூல்களின் ஆங்கிலமொழி பெயர்ப்பை மாத்திரம் வாசித்துவிட்டு ஒரு சமயநூலை உள்ளபடி உணர்ந்துகொள்ள நினைத்தல் அசம்பாவிதமாகும். ஒரு மொழியிலுள்ள நூலை இன்னொரு மொழியிற் பெயர்க்கும்போது முதனூலிலுள்ளபடி நுட்பமாக அம்மொழி பெயர்ப்புநூல் காட்டமாட்டாதென்று திருக்குறள், திருவாசகம், சில சைவ சித்தாந்தநூல்கள் முதலியவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த ஆசிரியர்கள் வற்புறுத்தியே எழுதியுள்ளார்கள்; அவ்வாசிரியர்கள் கூற்று மெய்யென்பதை இருமொழிகளிலும் வல்லார் ஏற்றுக்கொள்வர். இக்காரணம்பற்றியே குறித்த அறிக்கைப்பத்திரத்தும் ஆங்கிலங் கற்ற சில மக்கள் போதிய தமிழறிவில்லாமையால் ஆங்கிலத்தில் வெளிவரும் மாயாவாத நூல்களைப் படித்துவிட்டு......" என எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது; தமிழின் இலக்கண இலக்கியங்களைச் சந்தேக விபரீதமறக் கற்றபின்பே, ஒரு தக்க ஆசிரியரையடைந்து சித்தாந்த சாத்திரங்களைக் கற்கவேண்டுமென்பதே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் போன்ற பெரியார் தெருட்டியுள்ளதாகும். ஆங்கிலங் கற்ற மக்கள் சகல சித்தாந்தங்களையும் கற்கும் வசதியுடையராவரென்ற இந்த அகந்தையே பல விபரீதங்களுக்கு ஏதுவாகின்றதெனலாம். தமிழிலுள்ள நூல்களையும் சமய சாத்திரங்களையும் சோபான முறையாகக் கற்கவேண்டுமென்பதை யிட்டு ஸ்ரீமத், சபாபதி நாவலரவர்கள் தாம் இயற்றிய திராவிடப் பிரகாசிகை யென்னும் நூலில் நன்கு எடுத்துக்காட்டியுள்ளார். தமிழ்மக்கள் தமிழறிவோடு ஆங்கில மொழியறிவிலுஞ் சிறந்தாராய் எந்த நூலைக் கற்கப் புகினும் அதனால் அநர்த்தம் வராதென்பதே சபையாரால் வாசிக்கப்பட்ட அறிக்கையின் கொள்கையாகும்.

இனி, "ஆங்கிலங் கற்ற சில மக்கள்" என அறிக்கையிற் கூறப்படுதலால், பல மக்கள் அப்படித் திரிபாக விளங்கவில்லையென்பது தானே பெறப்படும்; மேலும் குறித்த அறிக்கைப் பத்திரத்திலே "மாயாவாதம்" எனக்குறித்தது "மிண்டிய மாயாவாத மென்னும் சண்டமாருதஞ் சுழித்தடித்தார்த்து" என மணிவாசகப் பெருமான் எடுத்துக்காட்டிய கொள்கையையே என எவரும் எண்ணிக்கொண்டால் எவ்வாறுன ஆட்சேபமும் நேர்ந்திருக்கமாட்டாது.

மேலும், குறித்த கடிதர் "சித்தாந்த நூல்களின் முடிபுகள் ஆங்கிலங்கற்ற அறிஞர் தம் மதி நுட்பத்திற்குப் பொருத்தமுடையனவாகக் காணப்படாமையே இந்நிலைக்குக் காரணமெனச் சிலர் கூறுவர்" என்று கூசாது வரைகின்றார்.

ஆங்கிலங் கற்ற அறிஞர் மதிநுட்பத்திற்குச் சித்தாந்த முடிவுகள் பொருத்தமுடையவையாகக் காணப்படாமைக்குக் காரணம் ஆங்கிலங்கற்ற மதிநுட்பமோ இல்லையேல் சித்தாந்த நூல்களின் முடிபோ என்பதுதான் ஆராயத்தக்கது. முகம் பழுதானுற் கண்ணாடியைக் குறை கூறலாமா? சித்தாந்த முடிபுகள் அவர்களுக்குப் பொருத்த முடையனவாகக் காணப்படாதபோது அவர்கள் சித்தாந்திகளல்லரென்பது தானேபெறப்படும். அவர்களுடன் நியாயம் பேசுவதும் அவர்கட்கு அதி நுட்பமுடையார் சித்தாந்தத்தைத் தெருட்ட முயல்வதும் வியர்த்தமாகும். இந்தச் சிலரைத்தான் அறிக்கைப்பத்திரத்திலும் "ஆங்கிலங் கற்ற சில மக்கள்" எனக்கொண்டதாகும். ஆங்கிலங்கற்ற அறிஞர் தம் மதிநுட்பத்திற்குச் சித்தாந்தநூல்களின் முடிபுகள் பொருத்தமுடையனவாகக் காணப்படாவெனின், இக்கடிதர் "பேரறிஞர்" எனத்தமது கடிதத்திலெடுத்துக்காட்டியுள்ள J.M. நல்லசுவாமிப்பிள்ளை, ச. சபாரத்தினமுதலியார், ஸேர். பொன். அருணாசலம், சு. சிவபாதசுந்தரம், R. S. சுப்பிரமணியம், கா. சுப்பிரமணியம்பிள்ளை M. A., K. R. சுப்பிரமணியம் M. A., டாக்டர் V. பரஞ்சோதி முதலிய ஆசிரியர்கட்கும் ஆராய்ச்சியாளர்க்கும் சைவ சித்தாந்த நூன்முடிபுகள் பொருத்தமுடையவாகக் காணப்படுவதென்னையோ? கடிதர் கூறுகிறபடி அவர்கள் "அறிஞர்" ஆகவும் இவர்கள் "பேரறிஞர்" ஆகவும் இருப்பதினுலா? இது தம கூற்றன்றிச் சிலர் கூற்றெனின், தங்கூற்றிற்கு முரண்பாடானவற்றை எடுத்துக்காட்டி மாறுகொளக்கூறி இடர்ப்படுதலால் ஆம்பயனென்னையோ?

## இந்தியச் செய்திகள்

### அடுத்த வைஸ்ராய் யார்?

மேற்கோண்டும் தமது உத்தியோக காலம் நீடிக்கப்படுவதை வைஸ்ராய் மயத்துவிலோசென்பு சிம்லாவில் விஷயமறிந்தவர்கள் பேசிக்கொள்ளுகிறார்களாம். இப்பொழுது உத்தியோக காலநீடிப்பை அவர் ஏற்பதாயின் யுத்தம் முடியும்வரை பதவியில் இருக்கவேண்டி ஏற்படும். எனவே, ஏப்ரில் மாசத்துக்குப் பிறகும் பதவியிலிருக்கும்படி பிருத்தானிய மந்திரிசபை லின்லித்கோ பிரபுவை வற்புறுத்தாதெனத்தோன்றுகின்றது.

அவருக்குப் பிறகு யாரை வைஸ்ராயாக நியமிப்பது என்பது குறித்து இந்திய அரசாங்கம் இப்பொழுது யோசித்து வருகின்றது.

இது சம்பந்தமாக டேவான்ஷயர் பிரபுவின் பெயர் நீங்கலாக இன்னும் இருவரது பெயர்கள் குறிப்பிடப் படுகின்றன. ஒருவர் காப்டன் லிட்டில்ட்டன் பிருத்தானிய பொது வாழ்க்கைக்கு இவர் புதியவராயினும் சர்ச்சில் மந்திரிசபையில் ஒருவராக இருந்து ஏலவே இவர் புகழடைந் திருக்கின்றனர். இவர் இப்பொழுது கேய்ரோவில் பிருத்தானிய மந்திரிசபையின் பிரதிநிதியாக இருந்து வருகிறார். மிகுந்த சாதுர்யமும் சாமர்த்தியமும் வேண்டிய பதவி இது.

மற்றெருவரது பெயர் கிரான்போன் பிரபு அந்நிய நாட்டுப்பகுதி உதவிக் காரியதரிசியாக இவர் சில வருஷங்களுக்கு வேலை பார்த்திருக்கிறார். இப்பொழுது குடியேற்றநாட்டுக் காரியாலயத்திற் பிரதான பதவியை வகித்து வருகிறார்.

### பொக்கிஷக் காரியதரிசி

சென்னை உதவி அக்கவுண்டன் ஜெனரல் ஸ்ரீ ஏ. லக்ஷ்மி நாராயணையர் திருவாங்கூர் அரசாங்கப் பொக்கிஷக் காரியதரிசியாக நியமிக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. இவர் விரைவிற் புதிய பதவியை ஏற்பார்.

### தூரப்பார்வைக் கண்ணாடிகள்

இந்திய அரசாங்கத்தைச் சேர்ந்த கணித சம்பந்தமான கருவிகளின் காரியாலயத்தில் "பைனக்குலர்" என்னும் தூரப்பார்வைக்கான கண்ணாடிகள் தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிகிறது.

### ஏகாதிபத்திய மகாநாடு

லண்டன் யுத்த மந்திரிசபையை அமைத்தல்' வருஷக் கடைசியில் ஏகாதிபத்திய மகாநாட்டைக் கூட்டுதல் ஆகிய இவை சம்பந்தமாக இன்னும் இறுதியாக ஒரு முடிவும் ஏற்படவில்லை, ஆயினும், மகாநாடு நடந்தால், இந்தியாவிற்குத் தக்க வகையிற் பிரதிநிதித்துவம் கிடைக்குமென்று அதிகாரிகள் கருதுகின்றனர்.

சென்ற மகாயுத்த சமயத்தில் நடந்தது போலப் பிருத்தானிய இந்தியாவிற்கு மாத்திரமே பிரதிநிதித்துவம் அளிக்கக் கூடாதென்று சமஸ்தானங்கள் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

### ஏழைகளுக்கு 3 கோடி ரூபா

1940-ம் வருஷத்தில் அகில பாரத சர்க்கா சங்கம் அங்கத்தவர்களுக்கும் நூற்போருக்கும் 3 கோடியே 59 லட்சரூபாவை விநியோகித்திருக்கின்றனர். லேட். ஜம்னுலால் பஜாஜ் சர்தார் படேல் ஆகிய இவர்களது முயற்சி காரணமாகச் சங்கத்துக்கு 4 லட்ச ரூபாய்க்கு நன்கொடைகள் கிடைத்தனவாயினும் இன்னும் பணம் தேவையாக இருக்கின்றதென்று கூறப்படுகின்றது.

### இந்தியநெருக்கடி தீர யோசனை

மகாத்மா காந்தி, ஜனுப் ஜின்னு, சேர். சாப்ரு, டாக்டர் அம்பேத்கார், ஸ்ரீ ராஜ். சவர்க்கர், சில சமஸ்தானதிபதிகள் ஆகிய இவர்களது மகாநாடு ஒன்றை வைஸ்ராய் கூட்டி, அதில் ஸேர். மோரிஸ் குவயரை அக்கிராசனம் வகித்து அறிக்கை செய்யும்படி கேட்க வேண்டுமென்றும், இதன் மூலம் சாஜிய முட்டுக்கட்டை நீக்க வைஸ்ராய் முயற்சி செய்ய வேண்டுமென்றும், சில இந்திய அதிகாரிகள் இங்கு ஆலோசனை செய்கின்றனர்.

### காந்திஜீயின் வாழ்த்து

ஸ்ரீமான், சத்தியமூர்த்திக்கு 54 வது பிறந்த தின விழா நடந்ததை முன்னிட்டு மகாத்மா அனுப்பிய தந்தியிற் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கின்றார்:-

"நீங்கள் பூரண ஓய்வு எடுத்துக்கொள்ளுவீர்கள் என்று நம்புகிறேன். அநேகேடு தேகசுகம் பெற்று நூறுமாண்டு விழாவையும் முடிக்க வேண்டுமென்பது எனது பிரார்த்தனை."

### இந்தியக் கோஷ்டியிலங்கை வருகை

இலங்கைக்கு வரும் இந்தியக் கோஷ்டியின் தலைவரான ஸேர். கிரிஜா சங்கர் பாஜ்பாய் வெள்ளிக்கிழமை பம்பாய்க்குப் புறப்பட்டு அங்கிருந்து இலங்கைக்குப் புறப்படுவார். உத்தியோக சம்பந்தமுள்ள அவரது ஆலோசனையாளர்களான மிஸ்டர். ஜி. எஸ். போஸ்மனும், மிஸ்டர். வித்தல்பாயும் சனிக்கிழமையன்று சிம்லாவிலிருந்து புறப்பட்டுப் பம்பாயில் அவரோடு சேர்ந்து கொள்ளுவார்கள்.

இந்திய கோஷ்டியின் ஏனைய அங்கத்தவர்களான ஸேர். மிர்ஸா இஸ்மெயில், திரு டி. ஆர். வெங்கட்டராம சாஸ்திரி, திரு. டி. ஜி. ரூதர்போர்ட் ஆகியோர் சென்னையில் தங்கள் கோஷ்டியோடு சேர்ந்துகொள்வார்கள்.

செப்டம்பர் மாதம் 4-ந் திகதி வியாழக்கிழமை யன்று இந்திய கோஷ்டி கொழும்புக்குப் போய்ச் சேருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### இந்திய அரசாங்கத்தின் நன்கொடை

கல்கத்தா, ஆக, 21—

இந்திய அரசாங்கம் இவ்வருஷ வரவு செலவுத் திட்டத்தில சாந்திநிகேதனத்திலுள்ள விஸ்வபாரதிக்கு 25 ஆயிரம் ரூபாய் ஒதுக்கி வைத்திருப்பதாகத் தெரிகிறதென ஹிந்துஸ்தான் "ஸ்டாண்டர்ட்" பத்திரிகை அறிவிக்கின்றது.

தாகூர் ஞாபகச்சின்ன நிர்வாக சபையின் கூட்டம் ஒன்று 30-ந் திகதியன்று கல்கத்தா டவுன்ஹோலில் நடைபெறும். அதில் தலைமை வகிக்க ஸ்ரீமதி. சரோஜினி ஒப்புக்கொண்டிருக்கிறார். அதற்காக அவர் 27-ந் திகதி ஹைதராபாத்திலிருந்து புறப்படுவார்.

### மலையாளத்துப் புகையிலை ஏற்றுமதி செய்வோர் சங்கம்

இம்மாதம் 28-ந் திகதி பி. கு. நாகப்பச் செட்டியார் கடையிலே ஒரு சங்கம் நிறுவப்பட்டது. இச்சங்கத்தின் நோக்கம் வியாபாரிகளின் நலவுரிமைகளைப் பாதுகாத்தலும், ஒரு புகையிலை வியாபாரத்தை முன்னேற்றமடையச் செய்தலுமேயாம். திரு. பி. சே. என். ஞானபண்டிதஞ் செட்டியார் இச்சங்கத்துக்கு அக்கிராசனராகவும், திருவாளர்கள் S. நாகலிங்கம் T. சின்னத்தம்பி ஆகிய இருவரும் உப அக்கிராசனர்களாகவும் திரு. கா. நல்லதம்பி காரியதரிசியாகவும் திரு. S. கனகரத்தினம் உபகாரியதரிசியாகவும் திரு K. சுப்புச்சாமிப்பிள்ளை தனாதிகாரியாகவும் முறையே தெரிவு செய்யப்பட்டனர். இவர்களோடு இன்னும் ஐவரைக்கொண்ட ஒரு நிருவாகசபையுந் தெரிவு செய்யப்பட்டது.

—கடித

### கடைகள் தீக்கிரையாயின

முருங்கன் றெயில்வே ஸ்டேஷனுக்கு முன்பக்கமாய் வீதியோரத்திலிருந்து வந்த பதினொரு கடைகள் சென்ற சனிக்கிழமை இரவு அக்கினிவாய்ப்பட்டு முற்றுகச் சேதமாயின. அன்றிரவு பதினொரு மணியளவில் யாதுகாரணத்தினாலோ ஒரு கடையில் பற்றிய தீயானது தீவிரமாகப் பரந்து ஏனைய கடைகளையுஞ் சேதமாக்கி விட்டன. பெருந்தொகையான அரிசிமூடைகளும், நெல்லுமூடைகளும், பெற்றோல் தகரங்களும், மண்ணெண்ணெய்த் தகரங்களும் புடைவைகளும், பிறவும் எரிந்து சாம்பராயின. சேதம் ஐம்பதினுயிரம் ரூபாவுக்கு மேலென மதிப்பிடப்படுகிறது. கடைகளில் ஒன்று தமிழருக்கும், மற்றென்று சிங்களருக்கும் உரியனவாம். ஏனையவைகளிலே இந்தியச் சோனகரே வியாபாரம் நடத்தி வந்தனராம்.

### யாழ்ப்பாணச் சுகாதார நிலை

#### பிரசவ ஸ்திரீகள் மரணம் அதிகரிக்கிறது

யாழ்ப்பாணம், ஆக 28

யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரியான டாக்டர். எஸ். வி. துரைராஜாவின் அறிக்கை கூறுவதாவது:

50,000 ஜனங்களைக் கவனிக்க வேண்டியிருப்பதால் நிப்போதைய சுகாதார சிப்பந்திகளின் தொகை போதாது.

"இவ்வருடத்திய இரண்டாவது மூன்று மாதங்களின் சிசு மரண விகிதம் முதல் மூன்று மாதங்களைவிடக் குறைந்து விட்டது.

இவ்வருடத்திய இரண்டாவது மூன்று மாதங்களில் தாய்ப்பேர்மரண விகிதம் முதல் மூன்று மாதங்களைவிட இரட்டிப்பாகிவிட்டது.

தண்ணீர் வசதி சம்பந்தமாக டாக்டர் துரைராஜா கூறுவதாவது:—

"யாழ்ப்பாணத்தின் ஒரு பாகத்திற்காவது சுத்தநீர் கிடைக்குமாறு செய்வதற்காகத் தேவைப்படின் குடியேற்றநாட்டு அபிவிருத்தி நிதியிலிருந்து உதவி பெறலாமெனப் பட்டினசபைக்குச் சிபார்சு செய்தேன். பட்டினப் பகுதியிலுள்ள வடிகால்கள் மிகவும் திருப்தியற்ற நிலையில் இருக்கின்றனவென்று நினைக்கின்றேன்."

## தோட்டக் கிளாக் சுடப்பட்ட மர்மம்

### தாழ்வாரத்தில் "ஐயோ" என்று அலறினர்

#### நீதிபதி முன் மனைவி கூறிய சாக்ஷியம்

பதுளை ஆக 28

எல்வரதைத் தோட்டத்தைச் சேர்ந்த தலைமைக் கிளாக் திரு. பிரேட்டு செல்வத்துரை துப்பாக்கியால் சுடப்பட்ட சம்பவம் இதுவரை மர்மமாகவே இருந்து வருகிறது. காயமடைந்தவர் பதுளை ஆஸ்பத்திரியிலனுமதிக்கப்பட்டசில நிமிடங்களுக்குள் மரணமானர். இதுவரை எவ்வித சாட்சியமும் துலங்கவில்லை. குறித்த சம்பவம் நிகழ்ந்த ஸ்தலத்திற்குச் சமீபத்திற கண்டு பிடிக்கப்பட்ட லைசென்ஸ் பெருத துப்பாக்கியும் சில குண்டுகளுமே இன்றுவரை கிடைத்தவைகளாகும்.

இச்சம்பவம் பற்றிய விசாரணையைப் பதுளை நீதிபதி நேற்றைய தினம் மேலும் தொடர்ந்து நடத்தினர்.

காலஞ்சென்றவரின் மனைவி ஸ்ரீமதி. முத்தம்மா செல்வத்துரை தனது சாட்சியத்தில் கூறியதாவது:-

எனது கணவர் எல்வரதைத் தோட்டத்தின் தலைமைக் கிளாக்காக இருந்தார். எங்கள் விவாகம் நடைபெற்றபொழுது ஊனுகலையைச் சேர்ந்த ஹாப்டன் தோட்டத்தில் அவர் வேலை பார்த்தார். விவாகத்திற்குச் சிறிது காலத்திற்குப் பின்னர் எல்வரதைத் தோட்டத்தின் தலைமைக் கிளாக்காக அவர் நியமிக்கப்பட்டார். வேலை முடிந்த பின்னர் ஒவ்வொரு நாளும் மாலையில் அவர் தொழிற்சாலைக்குச் செல்வது வழக்கம்.

குறித்த தினம் எனது கணவர் தேநீர் குடித்தபின், மாலை 4-45 மணிக்குப் பலகத்துவைக்குச் செல்வதாகத் தெரிவித்து விட்டுப் புறப்பட்டு இரவு 9 மணிக்குத் திரும்பி வந்தார். அவர் 'டி மேக்க'ருடன் வந்தாரோவென்பது எனக்குத்தெரியாது. அன்றைய தினம் இயந்திரங்களைப் பழுதுபார்ப்பவரான விசூரியாவுக்கும் கணக்குப்பிள்ளை சுப்பையாவுக்குமிடையே ஏற்பட்டிருந்த தகராற்றை எனது கணவர் தீர்த்துவிட்டதாக என்னிடம் தெரிவித்தார்.

##### துப்பாக்கிச் சப்தம் கேட்டது

நான் சாப்பாட்டறையில் இருந்தபோது பின்புறத் தாழ்வாரத்திற கைகால் கழுவுவதற்குத் திரு. செல்வத்துரை சென்றார். பின்னர் துப்பாக்கிச் சப்தம் கேட்டது. நானும் மற்றவர்களும் தாழ்வாரத்திற்கு ஓடினேம். அப்பொழுது என் கணவர் "ஐயோ!" என்று கூக்குரலிட்டார். தரையில் விழுந்து கிடந்த அவரை நாங்கள் எல்லோரும் தாழ்வாரத்திற்குத் தூக்கிச் சென்றோம். அருகில் வசித்த மிஸ்டர். ஹென்ட்ரி சமரநாயகா என்னும் 'டி மேக்கர்' ஸ்தலத்திற்கு வந்ததும், காலஞ்சென்றவர் தமது கார்களிலொரு இருப்பதாகக் கூறித் தம்மை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகும்படி தெரிவித்தார். பின்னர் சமரநாயகாவும் மற்றுஞ் சிலரும் அவரைப் படுக்கை அறைக்குத் தூக்கிச் சென்றனர். என் கணவர் வாக்குமூலங் கொடுக்க விரும்பிய பொழுது விசூரியா வருவதைக் கண்டதும், அவரை வெளியே துரத்தும்படி உத்தரவிட்டார்.

தோட்டச் சூப்பிரண்ட் மிஸ்டர். ஜி வில்சனும், ஸ்ரீமதி வில்சனும் தோட்டத்தைச் சேர்ந்த மருந்து கலப்பவருடன் வந்தபொழுது காலஞ்சென்றவரால் வாக்குமூலங் கொடுக்க முடியவில்லை. ஸ்ரீமதி. வில்சன் நமுனுகலம் சென்று ஒரு டாக்டரை அழைத்துவந்தார். காயங்களை டாக்டர் கட்டினர். ரதினபுரியிலிருந்த எனது தந்தைக்கு டெலிபோன் மூலம் செய்தி அறிவிக்கும்படி உதவிக் கிளாக்கரிடம் நான் கூறியதும் அவர் வெளியே சென்று வீட்டின் பின்புறத்தில் ஒரு துப்பாக்கியைக் கண்டதாகத் திரும்பிவந்து தெரிவித்தார். அந்தத் துப்பாக்கி கோட்டில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. காலஞ்சென்றவர் ஆபத்தான நிலைமையடையவே அவர் பதுளை ஆஸ்பத்திரிக்கழைத்து வரப்பட்டார். ஆஸ்பத்திரியிலனுமதிக்கப்பட்ட சில நிமிஷங்களுக்குள் என் கணவர் மரணமடைந்தார்."

குறிப்பாக எவர்மீதும் சந்தேகம் இருப்பதாக விசாரணையின்போது சாட்சி கூறவில்லை. திரு வில்சனுக்கும் கொழும்பு கோமேதை கம்பெனிக்கும் தமது கணவரைப்பற்றிய முறைப்பாடுகள் இரண்டு வருடங்களாகத் தெரிவிக்கப்பட்டு வந்ததாகவும் சாட்சி தெரிவித்தார்.

வைத்திய சுகாதார அதிகாரி டாக்டர் டி. பி. தாமோதரம் சாட்சியங் கூறுகையில் காலஞ்சென்றவரின் காயங்களை வர்ணித்து உடம்பிற் குண்டுகள் காணப்பட்டதாகத் தெரிவித்தார்.

எலாப் பொலிஸைச் சேர்ந்த கொன்ஸ்டபிள் அமரக்கூன் சாட்சியங் கூறுகையில், ஆகஸ்ட் மாதம் 23-ந் தேதி விசூரியாவின் வீட்டைச் சந்தேகத்தின் பேரில் சோதனை செய்தபொழுது ஒரு பக்கப் பெட்டியில் தமது அடைக்கப்பட்டிருந்ததையும் அதே பெட்டியிற் பலவிதமான பருமனையுடைய குண்டுகளிருந்ததையும் கண்டதாகத் தெரிவித்தார்.

## விவாகரத்துவிசாரணையில் விபரீதம்

### புருஷன் விம்மி யழுதார்

#### மனைவி மூர்ச்சையானுள்

தமது மனைவி ஐரீன் பிளாஞ்சே ஷோக்மன் முறைதவறி நடந்துகொண்டதாகக் காரணங்காட்டி அவளிடமிருந்து விவாகரத்துக் கோரி அரசாங்க உதவிச் சொத்து மதிப்பாளர் திரு. ஷோக்மன் தொடர்ந்த வழக்கு டிஸ்திரிக்கோட்டில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்வழக்கில மொறட்டுவையைச் சேர்ந்த ஆ. டேவிட் பெர்னுண்டோ என்னும் இனன்பெக்டர் 2-ம் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறார்.

குழந்தைகளின் நலனுக்காக ஒரு சமரசத்தை ஏற்படுத்துவதுபற்றி வழக்கறிஞர் ஆலோசனை கூறும்போது, மிஸ்டர் ஷோக்மன் கோட்டில் விம்மி விம்மி அழுது சமரசத்திற்கு இணங்க மறுத்துவிட்டார். தமது குழந்தைகளைத் தம்மிடமே ஒப்படைக்கும்படி அவர் கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீமதி ஷோக்மன் பதிலளிக்கும்போது தாம் 2வது பிரதிவாதியோடு ஒழுங்கீனமாக எந்தக் காலத்திலும் நடந்துகொள்ளவில்லையென்று தெரிவித்து, விவாகரத்துக் கோரித் தமக்கும் தமது குழந்தைகளுக்கும் நிரந்தர ஜீவனம்சம் பெற்றுத் தரும்படி கேட்டுக்கொண்டார்.

2வது பிரதிவாதி தமது பதிலைத் தாக்கல் செய்யவில்லை. அவர் கோட்டுக்குப் போகவுமில்லை.

குழந்தைகளின் நலனை முன்னிட்டு ஒரு சமரசத்தை ஏற்படுத்தலது விரும்பத்தக்கதென்றும், அதுபற்றி வாதியின் வழக்கறிஞரான திரு. ஆர். எல். பெரேராவோடு தாம் பேச விரும்புவதாகவும் பிரதிவாதிபக்க வழக்கறிஞர் மிஸ்டர் கிராஷியன் தெரிவித்தார்.

வழக்கறிஞர்கள் கலந்துகொள்ளும்பொருட்டு நீதிபதி தமது அறைக்குச் [illegible] தெரிவித்தார். அந்நிலைமையில் சாட்சி விம்மி விம்மி அழுது சமரசத்திற்குச் சம்மதிக்க மறுத்துவிட்டார். "வேண்டாம்! தயவு செய்து வேண்டாம்" என்று வழக்கறிஞரிடம் அவர் தெரிவித்தார். இவ்வழக்கை நான் கடைசிவரை நடத்திக் கோட்டாரின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள ஆயத்தம் என்றும் அவர் தெரிவித்தார். தம்மிடமுள்ள கடைசிச் செம்புக்காசையும் இவ்வழக்கிற் செலவிட ஆயத்தமாக இருப்பதாக அவர் கூறினர்.

என்ன வந்தாலும் கடைசிக் குழந்தையை விட்டுப் பிரியத் தமது கட்சிக்காரர் விரும்பவில்லையென்று மிஸ்டர் பெரேரா கூறினர்.

அப்படியானுல், வழக்கைத் தொடர்ந்து நடத்தப்போவதாக மிஸ்டர் கிராஷியன் தெரிவித்தார்.

மிஸ்டர் பெரேரா தமது கட்சியை ஆரம்பித்தார்.

##### கணவர் கூறிய சாக்ஷியம்

மிஸ்டர். ஷோக்மன் சாட்சியங் கூறும்போது விக்ரோரியாப் பூந்தோட்டத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைப்பற்றிக் குறிப்பிட்டு இரண்டாவது பிரதிவாதியைத் தாம் தாக்கியதாகத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியதாவது.

"அத்தருணத்தில் பூந்தோட்ட மேற்பார்வையாளர் வந்தார்; அவர் இருவரையும் காரிலேற்றி வீட்டுக்கு அழைத்துச் சென்றுர்."

அந்நிலைமையில் அவர் கோட்டில் விம்மி அழ ஆரம்பித்தார். பின்னர் அவர் தொடர்ந்து கூறியதாவது:—

"நான் இரண்டு பிரம்புகளை வாங்குவித்து என் மனம் திருப்திப்படும்வரை தாக்கினேன்"

##### பிரதிவாதி மூர்ச்சித்து விழுந்தார்

ஸ்ரீமதி ஷோக்மன் எழுதியதாகச் சொல்லப்பட்ட சில கடிதங்களை மிஸ்டர் பெரேரா வாசிக்கும்போது குறித்த பெண் மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தார், உடனே சாக்ஷியும் விம்மி விம்மி யழுதார். ஸ்ரீமதி ஷோக்மன் வெளியே அழைத்துச் செல்லப்பட்டார்.

அப்பொழுது சாக்ஷி தம்மைக் கேலிசெய்வதாக மிஸ்டர் கிராஷியன் நீதிபதிக்குத் தெரிவித்தார்.

மேலும் சாட்சி கூறியதாவது:— "பெர்னுண்டோவால் மந்திர சக்தியின் மூலம் எனது மனைவி ஏமாற்றப்பட்டதாக ஒரு மந்திரவாதியின் மூலம் நான் கண்டு பிடித்தேன்.

வெஸ்லிக் கல்லூரியைச் சேர்ந்த ஒருவரோடும் ஒரு வழக்கறிஞரோடும் நகரசபையைச் சேர்ந்த ஒருவரோடும் இரண்டாவது பிரதிவாதியோடும் நடந்துகொண்டதைப்பற்றிப் பிரதிவாதி தன்னிடம் சில செய்திகளைத்தெரிவித்ததாகச்சாட்சி கூறினர்.

## நடன மாதர் காருக்குக் குண்டு வீச்சா?

### கொலைசெய்ய எத்தனித்ததாக வழக்குத் தொடரலாமாம்

(சமதிருபர்)

31-8-41

வண்ணார்பண்ணையிலுள்ள நடன மாதர்களிருவரும் அவர்களைச் சேர்ந்தவருமாக G. 1175ம் இலக்கக் காரில் ஒரு கோவில் திருவிழாவுக்கு நடனத்துக்காகச் சென்று விடு திரும்பி வருகையில் திருநெல்வேலி அம்மன் கோவிலுக்குச் சமீபமாக நல்லூரில் வசிக்கும் S. சோமசுந்தரம் அல்லது சோமுவும் S. நடராசா அல்லது விதானை என்பவருமாக அக் காருக்கு யாழ்ப்பாணத்திற் செய்யப்பட்ட ஒரு குண்டை அல்லது எறிவெடியை வீசி எறிந்ததாக ஒரு செய்தி யாழ்ப்பாணம் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது.

சப்-இன்ஸ்பெக்டர் தனபாலா விசாரணை செய்தபின்னர் S. சோமசுந்தரத்தைப் பிடித்து யாழ்ப்பாணம் நீதிபதி மிஸ்டர் குவிண்டன் பெர்னுண்டோ முன்னிலையிற் கொண்டுவந்து அவரை விளக்க மறியலில் வைத்திருக்க அனுமதிகேட்டார்.

G 1175ம் இலக்கக் கார் கொழும்பித்துப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டிருக்கிறது.

எதிரிக்காக ஏற்பட்ட பிரபதாக்தர் திரு. சிங்கரெத்தினம் எதிரியைப் பிணையில் விடும்படி நீதிபதியைக் கேட்டார்.

நீதிபதி எதிரியைப் பிணையில்விட மறுத்தார். S நடராசா வென்பவர் மறைந்து திரிகிறுர்.

நீதிபதி வழக்குத் தொடர்வது எப்போதென்று சப்-இன்ஸ்பெக்டரிடம் கேட்டபோது, அவர் தாம் கொழும்பிலிருந்து கிடைக்கும் மறுமொழியைக்காத்திருப்பதாகக் கூறினர். நீதிபதி விசாரணையை வருகிற 5—9-41ந் திகதிக்குத் தவணையிட்டுச் சோமசுந்தரத்தை விளக்க மறியலில்விட்டார். கொலைசெய்ய எத்தனித்ததாகக் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்படலாம் இருக்கிறதென வதந்திகேரும்.

உ
சிவமயம்

# கந்தபுராண படனம்

சைவபரிபாலன சபையாரால், தமது வாசிகசாலையில், அவ் வாசிகசாலைத் திறப்பு விழாவிலன்று (2-5-41) ஆரம்பிக்கப் பெற்ற கந்தபுராண படனம் தினந்தோறும் மாலை 6 மணி தொடக்கம் 9 மணி வரை சிறப்புற நடைபெற்று வருகின்றது. பல பெரியோர்கள் வந்து சிரவணஞ் செய்து அபிமானித்து வருகின்றனர். வருகிற திங்கட்கிழமை (1-9-41) சூரபன்மன் வதைப்படலப் பூர்த்திவிழா மிகச் சிறப்பாக நடைபெறும். அவ்வமயம் சைவாபிமானிகள் அனைவரும் சமுகமளித்து இந்நிகழ்ச்சியை ஊக்கப்படுத்துமாறு வேண்டப்படுகின்றனர்.

பெண்கட்குப் பிரத்தியேகமான இடம் அமைக்கப்பட்டிருக்கிறது.

சபைக் காரியதரிசி

## வெள்ளி நாணய ஏற்றுமதி

1941-ம் ஆண்டின் நாணயச்சட்டப்படி இலங்கையின் புதிய ரூபா நாணயம் உண்டாக்கப்பட்டது. இப்படிச் செய்த நோக்கத்திற்கு நாணயப் பொறுப்பாகப் பம்பாய் நகரிலுள்ள இந்தியசேமிப்பு வங்கியில் அல்லது லண்டனிலுள்ள முடிக்குரிய காரிய கர்த்தர்களிடம் நிதி சேமித்து வைத்திருக்க வேண்டும். ஆகையால் இரண்டாம் முறையாக 35 தொன் நிறையுள்ள வெள்ளி ரூபா நாணயங்கள் இலங்கைத் திறைசேரி அதிகாரிகளால் 400 விசேஷ பெட்டிகளில் அடைக்கப்பட்டு இக்காட்களில் பம்பாய்க்கு அனுப்புவதற்குத் தயார் செய்யப்படுவதாய் அறிகிறோம். சென்ற கிழமையும் இதேமாதிரியாக 35 தொன் நிறையுள்ள வெள்ளி நாணயங்கள் பம்பாய்க்கு அனுப்பப்பட்டுள்ளன. முன்னர் அனுப்பப்பட்டதும் இப்போது அனுப்பப்படவிருப்பதுமான வெள்ளி நாணயத்தின் பெறுமதி 50 லட்சம் ரூபாவாகும்.

## விவாகம்

அம்பலவாணர்-வள்ளியம்மை

களிபுர வாசரும் காலஞ்சென்ற நில்லையம்பலம் அவர்களின் ஏக புதல்வரும், டாக்டர் முத்து அவர்களுக்கு நன்மருகரும் ஹாங் ஹாங் சர்வகலாசாலையில் வைத்திய தாரதரப் பட்டம் பெற்றுத் தற்போது மலாக்காவில் சொந்தமாய் வைத்தியசாலை அமைத்து நடாத்திவருபவருமான டாக்டர் தி. அம்பலவாணர் அவர்களுக்கும் களிபுரத்தை ஜனனஸ்தானமாகக் கொண்டவரும், மலாயாவைச் சார்ந்த செகிரி செம்பிலான் பாகாணத்திலுள்ள சிறம்பானின்கண் அரசாங்க வைத்திய சேவையில் ஆசிரியர்களுக்கெனப்பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட உயர்தர பதவிகளிலிருந்து பிரபலிக்கம் பெற்ற காலஞ்சென்ற டாக்டர் ஏ. எஸ். முத்து அவர்களின் சிரேட்ட புத்திரியும், கன்னுகம் பிரபல குடும்பத்தைச் சார்ந்த வைத்தியநாதர் சுப்பிரமணியமவர்களின் பௌத்திரியுமான சௌபாக்கியவதி வள்ளியம்மைக்கும் சிறம்பான் 270 நியூராக் ரோட் மணமகன் இல்லத்தில், சைவாகம முறைப்படி, நிகழ்ந்த 6-7-41 இன் சுப முகூர்த்தத்தில் விவாகம் சிறப்பாக நிறைவேறிற்று.

அத்தருணம் இக்குடும்பத்தாரின் பந்துக்களும் நண்பர்களும் பல திசைகளிலிருந்து பெருந்தொகையினராய்ச் சமுகமளித்தனர். தம்பதிகள் சகல ஐசுவரியங்களையும் பெற்று இனிது வாழ்வார்களாக.

## குடியில்லாதவீட்டில் 500 ரூத்தல் பீடி

கொச்சிக்கடையிலுள்ள ஒரு வீட்டில் பீடிப் புகையிலை இருப்பதாக ஒரு முன் அறிவித்தல் கிடைத்ததைக் கொண்டு மதுப்பரிசோதகர் F. S. பெரைரா ... மற்றையோருமாகச் சென்று 500 இறாத்தல் பீடிப் புகையிலையைக் கண்டெடுத்தனர். அந்த வீட்டில் யாரும் குடியிருக்கவில்லை. ஆகையால், ஒருவர்மீதும் வழக்குத் தொடரமுடியாது விட்டிருக்கிறார்கள்.

க. தி.

## பரமேசுவரக் கல்லூரி

திரு. P. சிவராமக்கிருஷ்ணமேனனவர்கள் B. Sc. (சென்னைச் சர்வகலாசங்கம்) யாழ்ப்பாணம் பரமேசுவரக் கல்லூரியில் ரசாயனசாஸ்திரம், தாவரசாஸ்திரம், விலங்கியல் நூல் பிராணிவர்க்கவியனூல், சுகாதார சாஸ்திரமென்னுமிவற்றைப் பயிற்றும்பொருட்டு நவமாக நியமிக்கப் பெற்றுள்ளாரென, மேற்படி கல்லூரியதிகாரிகள் வாயிலாக அறிந்து மகிழ்ச்சியுறுகின்றோம்.

## பாதுகாப்புக் கைதியின் சிறை மாற்றம்

குழந்தையைத் தினசரி பார்த்துவர அநுமதி

கண்டி, ஆக 28

பாதுகாப்புச் சட்டப்படி இங்கு பக்கோபஸ்தில் வைக்கப்பட்டிருக்கும் நான்கு சமசமாஜக் கட்சி அங்கத்தவர்களில் ஒருவரான மிஸ்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் குழந்தையொன்று அசௌக்கியமாயிருப்பதால் அக் குழந்தையைப் போய்ப் பார்த்து வருவதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு அவர் வெலிக்கடைச் சிறைக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

டக்டர் டி. சில்வாவின் பெண் குழந்தையொன்று சிறிது காலமாக அசௌக்கிய முற்றிருப்பதாகவும் அக் குழந்தை தந்தையிடம் மிகுந்த பற்றுதலுள்ளதாகலின் அது தன் தந்தையைச் சந்திக்கச் செய்தால் சிகிச்சைக்கு உதவியாயிருக்குமென்று டக்டர்கள் சிபார்சு செய்ததாகவும் அறிப்படுகிறது. அதன்மேரில் டக்டர் டி. சில்வாவை, நிபந்தனையின பேரில் விடுதலை செய்ய மனுச் செய்யப்பட்டது. ஆயின், அதிகாரிகள் அதற்கு மறுத்துவிட்டனர். விடுதலைக்குப் பதிலாகத் தினசரி அவர் வெலிக்கடைச் சிறையிலிருந்து பொலீஸ்பாதுகாப்பில் தம் வீட்டுக்குப் போய்ச் சிறிதுநேரம் தங்கியிருந்து விட்டுத் திரும்பிவர அநுமதிக்கப்பட்டிருக்கிறது.

## மலாயாவுக்குச் சீன நல்லெண்ணக் கோஷ்டி

நங்கன், ஆக 24

சீன நல்லெண்ணத் தூதுக்கோஷ்டி ஒன்று சங்கிங்கிலிருந்து புறப்பட்டு இம்மாதக்கடைசியில் றங்கூன் வந்து சேரும். பழைய கல்வி மந்திரி சியாங்மான வி அதன் தலைவராக இருப்பார். டாக்டர் மாஸஷ யூபங் உபதலைவர் கோஷ்டியில் மொத்தம் 9பேர் இருப்பர்.

## தேர்தல் மனு விசாரணை முடிவு

தீர்ப்புக் கூறுதல் தவணையிடப்பட்டது

மருதானை தெற்கு வாட்டிற்கு மிஸ்டர், ஏ. இ. குணசிங்கா நகரசபை அங்கத்தவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை ஆக்ஷேபித்து மிஸ்டர் எச். ஏ. டி. பீரிஸ் தொடர்ந்திருக்கும் மனு சம்பந்தமான விசாரணை சென்ற வெள்ளிக்கிழமை மிஸ்டர் ஹெரன் முன்னிலையில் தொடர்ந்து நடைபெற்றது.

மனுதார்பக்க வழக்கறிஞர் திரு. பார். குமாரகுலசிங்கம் தமது தொகுப்புரையை முடித்துக்கொள்ளும் போது கூறியதாவது:-

குறுக்கு விசாரணையில் திரு. குணசிங்கா தமக்கே விரோதமாகப் பதிலளித்தார். அவர் விசுவாசத்தை மதிக்கவில்லை யென்பதை அவருடைய சாக்ஷியம் நன்கு வெளிப்படுத்துகின்றது. மிஸ்டர் பேக்கர் சில விஷயங்களை மிகைப்படுத்திக் கூறியதாகத் திரு. குணசிங்கா தெரிவித்தார். மிஸ்டர் பேக்கர் எவ்வளவு ஊக்கத்தோடும் கவனத்தோடும் சாக்ஷியம் கூறினாரென்பதைக் கோர்ட்டார் கண்டிருப்பீர்கள்.

மிஸ்டர் குணசிங்காவின் தெளிவற்ற சாக்ஷியத்தைக் குறித்துத் திரு. குமாரகுலசிங்கம் கூறியதாவது:-

"இவர் அரசாங்கசபையில் வீண் பேச்சுப் பேசுகிறவர்களின் வகையைச் சேர்ந்தவர். ஆள்மாறாட்டம் பல ஏற்பட்டனவென்று மிஸ்டர் குணசிங்கா தன சாக்ஷியத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார். தம்முடைய சிலவிஷயங்களைப்பற்றி அவர் மறந்ததிலிருந்து அவர் யாரென்பது தெரிகிறது.

கோட்டில் சமர்ப்பிக்கப்பட்ட விரியா பத்திரிகைப் பிரதிகள்பற்றி வழக்கறிஞர் கூறியதாவது:-

அவைகளில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் நடை மிஸ்டர். குணசிங்காவின் மன நிலையைக் காட்டுகிறது. மேலும் அப்பத்திரிகையாசிரியர் இன்னும் அந்த உத்தியோகத்தில் இருக்கிறார்.

மிஸ்டர் குணசிங்கா பக்க வழக்கறிஞர் மிஸ்டர் வி. வி. ரணவாக்கை சட்ட சம்பந்தமான விஷயங்கள்பற்றிப் பேசினார்.

பிறகு நீதிபதி தமது தீர்ப்பைத் தவணையிட்டார்.

## ஆங்கிலங் கற்ற மாயாவாதிகள்


இந்துசாதனப் பத்திராசிரியர் அவர்கட்கு,

ஐயா,

தங்கள் பத்திரிகையில் வெளிவந்துள்ள சைவபரிபாலனசபை வருடாந்த அறிக்கையில் பின்வருங் குறிப்புக் காணப்படுகிறது. "இக்காலம் ஆங்கிலம் கற்ற சிலமக்கள் போதிய தமிழ் அறிவிலாமையினால் ஆங்கிலத்தில் வெளிவரும் மாயாவாத நூல்களைப் படித்துவிட்டு தாம் அவ்வாறு கற்றுக்கொண்டவைதான் சைவசமய உண்மையென்று நிரூபிக்க விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்." இக்குறிப்பு ஆங்கிலங் கற்ற தமிழர்களையே பொருளாகக் கொண்டு எழுதப் பெற்றதனால், இக் குறிப்பினையும் அது சுட்டி நிற்கும் பொருளினையும் ஒரு சிறிது ஆராய்வது பொருத்தமாகும். காரணமின்றி ஆங்கிலங் கற்ற மக்கள் சிலரைக் குறைகூறியிருப்பதால் அவர்கள் பொருட்டு எழுதப்படும் இக்கடிதத்தைத் தங்கள் பத்திரிகையில் வெளியிடும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

(1) ஆங்கிலங் கற்ற மக்கள் சகல மத சித்தாந்தங்களையும் கற்கும் வசதி உடையாராயிருக்கவும், அவர்கள் மாயாவாத நூல்களை மாத்திரமே கற்கின்றாரென அறிக்கை கூறுவதின் காரணமென்னையோ? ஆங்கிலத்தில் மாயாவாத நூல்களைவிட வேறு சைவ, சாக்த, வைணவ நூலகள் இல்லையென்பது சபையார் கருத்துப் போலும். அறிக்கையில் பிறிதோரிடத்தில் "ஆங்கிலமூலம் சமய உண்மைகளைப் புத்தக வாயிலாக வெளியிட வேண்டும்," என்னும் ஒரு குறிப்பு இருப்பதால் ஆங்கிலத்தில் சைவ சித்தாந்த நூல்கள் இல்லாமையாலேயே ஆங்கிலங் கற்றோர் மாயாவாத நூல்களைக் கற்கின்றனர் என்னும் முடிபுக்குச் சபையார் வந்திருத்தல் கூடுமென நாம் அநுமானிக்கின்றோம். ஆங்கிலங் கற்றோர் சித்தாந்த நூல்களைக் கற்பதற்குப் பல வசதிகள் இருக்கின்றன வென்பதைச் சபையார் அறியாதிருந்தமை வியப்பே. சிவஞானபோதம், சிவஞானசித்தியார், திருவருட்பயன், திருமுருகாற்றுப்படை, திருவாசகம், தாயுமானவர் பாடல்கள், மிருகேந்திர ஆகமம் முதலியன ஆங்கில மொழியில் எழுதப் பெற்றிருக்கின்றன. மொழிபெயர்ப்பு நூல்களைவிட சைவசமயத்தைப் பற்றிய சிறந்த ஆராய்ச்சி நூல்களும் கட்டுரைகளும் திருவாளர்கள். J. M. நல்லசுவாமிப்பிள்ளை, ச. சபாரத்தின முதலியார், சேர். பொன். அருணாசலம், கு. சிவபாதசுந்தரம், R. S. சுப்பிரமணியம், கா. சுப்பிரமணியம் பிள்ளை M. A., K. R. சுப்பிரமணியம் M. A., டக்டர் V. பரஞ்சோதி டக்டர் L. D. பார்னெற், (Dr. L. D. Barnett) டக்டர் V. V. ரமணன், பிரமஸ்ரீ K. A. நீலகண்ட சாஸ்திரியார் M. A., பிரமஸ்ரீ S. சூரியநாராயண சாஸ்திரியார் M. A., C. நாராயண ஐயர் M. A. முதலிய பேரறிஞர்களால் வெளியிடப்பட்டிருக்கின்றன. எனவே, ஆங்கிலங் கற்றோர் மாயாவாத நூல்களை மாத்திரம் கற்கின்றார் என்பது கூக்குரல் இடுவது வீண் சண்டைக்கு ஆவேசங் கொள்வது போல் இருக்கின்றது. சித்தாந்த நூல்கள் பல ஆங்கிலத்தில் கிடைக்கக்கூடியனவாயிருக்கவும் ஆங்கிலங் கற்றோர் மாயாவாத நூல்களையே விரும்பிக் கற்கின்றாராயின், அதற்குக் காரணம் என்னவென ஆராய்வது சபையார்க்கு நன்மை பயக்கும். சித்தாந்த நூல்களின் முடிபுகள் ஆங்கிலங்கற்ற அறிஞர் தம மதி நுட்பத்திற்குப் பொருத்தமுடையனவாகக் காணப்படாமையே இந்நிலைக்குக் காரணம் எனச் சிலர் கூறுவர்.

(2) அறிக்கையிற் கூறப்படும் மாயாவாத நூல்கள்தாம் எவை? ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளால் விளக்கப்பட்ட அத்வைத சித்தாந்தமே மாயாவாதமென வழங்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலுள்ள ஆங்கிலங் கற்றோர் ஸ்ரீ சங்கரர் பாஷியங்களைக் கற்பதிற் கண்ணுங் கருத்துமாயிருக்கின்றனர் என எவரும் கூற முன்வரார். ஆகவே, இவர்கள் கற்கும் மாயாவாத நூல்கள் நாமறிந்தமட்டில் சுவாமி விவேகானந்தர், சுவாமி இராம தீர்த்தர் முதலியோர் வெளியிட்டுள்ள சமய நூல்களேயாகும். சபையார் மாயாவாத [illegible]



கொக்குவில்மேற்கு மஞ்சவனப்பதி
முருகப்பெருமான் ரதோற்சவம்
4-9-41 வியாழக்கிழமை நடைபெறும்

இந் தேர் திறமைவாய்ந்த இந்திய சிற்ப சாஸ்திரிகளால் செய்யப்பட்டது.

Mis 9¼ 1.9.41

இவர்கள் மதியிருத்தவாறு? விவே[illegible] ... நலம்.

(3) இத[illegible] ... லங் கற்ற தமிழர் கொண்டுள்ள அன்பிற்கும் மதிப்பிற்கும் தமிழறிவின்மையே காரணமெனக் கூறுதல் பிதற்றுமொழியே யன்றி வேறல்ல காலத்திற்கேற்றன செய்து நாட்டையும் சமயவாழ்வையும் சிறப்பித்த உத்தமரைப் போற்றுதலும், அவர் வழி நின்று பணியாற்றுதலும் மக்களிடையே என்றுங் காணப்படும் சிறந்தகுணமென்பதைச் சபையார் உணர்தல் நன்று. காந்தியடிகளது நூல்களையும் டக்டர் ரவீந்திரநாத தாகூர் அவர்களது நூல்களையும் பெருவிருப்போடு பலருங் கற்கின்றனர். இவ்விருவர்களின் நூல்களை மக்கள் தமிழ் அறிவின்மை காரணமாகவே கற்கின்றனர் என ஒருவர் கூறுவாராயின் அவரது கூற்றை அறிவுடையார் எள்ளி நகையாடுவரன்றோ? தமிழறிவின்மை காரணமாக மாத்திரம் ஒருவரும் விவேகானந்தரதும், அவர் போன்ற பெரியார்களதும் மாயாவாத நூலகளைக் கற்க முன்வரவில்லை. விவேகானந்தர் இந்து சமயத்திற்கும், இந்திய நாட்டின் புனருத்தாரணத்திற்கும் செய்துள்ள அரும் பெரும் செயல்களின் பயனாக அவர்மீது மக்களுக்கேற்பட்டுள்ள அன்பு காரணமாகவே அவரது நூல்களைப் பலரும் தேடிப் படிக்கின்றனர். அவ்விதம் அவரது நூல்களைப் படித்துள்ளோரது சமய வாழ்க்கையும் பொதுநல சேவைத் திறனும், சைவ சித்தாந்த நூலகளை மாத்திரமே தமிழில் கற்றுரினும் பார்க்கக் குறைவானதாக்குமா, பிற்போக்கும் உடையனவன்று என்பதை நாம் சபையாருக்கு எடுத்துக் கூற விரும்புகின்றோம்.

ஸ்ரீ விவேகானந்தர் இந்து சமயத்திறகுச் சில தொண்டுகள் செய்திருப்பின் அவை சைவ சித்தாந்த சமயத்திற்கு எவ்விதத்திலும் பொருந்துவனவன்று என 'இந்து சம[illegible]

சி. சுப்பிரமணியம்.

18-8-41

[illegible] ...திகளுள்ளும் பல பிரிவினர் காணப்படுகின்றனர். தென்னிந்தியாவிலுள்ள பல பேரறிஞர் வடமொழி வேதங்களையும், ஆகமங்களையும் பிரமாணமாகக் கொண்டுள்ள சைவசித்தாந்தம் தமிழர்களது சமய நெறியன்று என வற்புறுத்துகின்றனர். யாழ்ப்பாணத்திலும் இக்கொள்கையுடையோர் பலர் காணப்படுகின்றனர். யாழ்ப்பாணச் சைவபரிபாலன சபையாரால் பரிபாலிக்கப்படும் சைவம் மேற்கூறப்பெற்றுள்ள எல்லாப் பிரிவுகளையும் அடக்கியுள்ளதா அல்லது ஒரு பிரிவாகிய சித்தாந்த சைவத்தை மாத்திரம் கொண்டுள்ளதா? ஒரு பிரிவை மாத்திரமே கொண்டுள்ளதாயின் 'சைவ பரிபாலனசபை,' என்னும் பெயரினை மாற்றி, தென்னிந்தியாவில் வழங்குவதுபோல், 'சைவசித்தாந்த பரிபாலன சபை' யெனப் பெயரிடுவது நன்று. யாழ்ப்பாணத்தில வேதாகம சைவ சித்தாந்த சபை எனவும் ஒன்றுண்டு. அவர்களாற் பரிபாலிக்கப்படும் சைவத்திற்குஞ் சைவபரிபாலன சபையாரால் பரிபாலிக்கப்படும் சைவத்திற்கும் வேற்றுமைகள் உண்டா? பலதிறப்பட்ட கொள்கைகளையுடைய சைவ சமயங்கள் நாட்டில் மலிந்திருப்பதனால், சபையார் பரிபாலிக்கும் சமயம் எச் சைவம் என்பதுபற்றிச் சந்தேகம் எழுகின்றது. நாம் இதுகாறும் சைவபரிபாலனசபை சிவத்தை முழுமுதற் பொருளாகக் கொண்டு வழிபடும் மக்கள் அனைவர்க்கும் பொது என்றே எண்ணியிருந்தோம். ஆயினும், அறிக்கையில அந்தந்தயர் இலக்கணங்கள் கூறப்படுவதனால் சபையின் தன்மையினையும் விளைவேண்டிய சக்[illegible]

## காவெட்டி கிழக்கு யார்க்கரு விநாயக வித்தியாசாலைப் பிரசங்கம்

நிகழும் விஷு வருஷம் ஆவணி மாதம் 11-ந் தேதி (27-8-41)புதன் கிழமை மாலை 7 மணியளவில் ஷெ வித்தியாசாலையில், டக்டர் C. சபாபதி M.R.C.M; M.R.C.S; L.R.C.P; அவர்கள் தலைமையில், மாணவன் க. கணபதிப்பிள்ளை தேவாரமோதச் சங்கம் ஆரம்பமாயது. வித்தியாசாலையின் உள்ளும் புறமும் பல்லாற்றுக் கணக்கான ஆண்களும் பெண்களும் குழுமியிருந்தனர். வித்தியாசாலை மண்டபம் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. தலைவரவர்கட்கு முன் வைக்கப்பட்ட மேசையை நிறைகுடம், குத்துவிளக்கு, புஷ்பங்கள், பழவகைகள் முதலியன அழகுபடுத்தின. தலைவர் டக்டர் C. சபாபதியவர்கட்கு ஆசிரியர் திரு. வ. சின்னையா அவர்களும், சைவ வித்தியா விருத்திச் சங்கக் காரியஸ்தர் திரு. சு. இராசரத்தினம் அவர்கட்கும் திரு. சி. லக்ஷ்மிபுரம் அவர்களும் அழகான முல்லைமலர் மாலையைச் சூட்டினர். மாமாலை திரு. மூ. முருகேசு அவர்களாற் சூட்டப்பட்டது.

தலைவர் முன்னுரையாகப் பாடசாலையின் அவசியத்தைப் பற்றியும் மாணவர்களும் பெற்றோர்களும் பாடசாலையில் மிகுந்த கரிசனையுடையவர்களாக இருக்க வேண்டுமென்பதைப் பற்றியும், அப்படியிருந்தாற் கிராமம் கூடிய விரைவில் முன்னேற்ற மடைவதற்கு எவ்வித தடையுமில்லை யென்பதைப் பற்றியும் மிகவும் விரிவாகக் கூறினர். பின் கோப்பாய் அரசினர் சாதனா பாடசாலை ஆசிரியர் பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளையவர்கள் "திருநாவுக்கரசு நாயனர் பெருமை" என்னும் விஷயத்தைப் பற்றிச் சுவையாகச் சபையோருள்ளம் களிக்குக ஓர் உபந்நியாசஞ் செய்தனர். இரண்டாவதாகத் திரு. சு. இராசரத்தினமவர்கள் "சமயமுங் கல்வியும்" என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு பெற்றோரின் மனதைக் கவரத்தக்க ஓர்சிறந்த சொற்பொழிவாற்றினர்கள்.

பின்னர், திருவாளர்கள் பண்டிதர் க. மயில்வாகனம், க. பொன்னம்பலம், மா. வைத்தியலிங்கம் ஆசிரியர்கள் குறிப்புரை கூறினர்.

அதன் பின்னர், ஆசிரியர் திரு வி. கணபதிப்பிள்ளையவர்கள் தலைவர்க்கும் உபந்நியாசகர்கட்கும் குறிப்புரை கூறியவர்கட்கும் சபையோர்க்கும் நன்றி கூறினர்.

இற்றில் தேவார பாராயணத்தோடு கூட்டம் 10½ மணியளவில பூர்த்தியாயிற்று.

—கடித

## 10 லக்ஷம் ரூபா பெறுமதிப் புடவை இறக்குமதி

இம்மாசத்தின் முதல் இரண்டு வாரங்களிலும் இலங்கையிலேபத்து லட்சம் ரூபாவுக்குமேல் பெறுமதியான புடவைகள் இறக்குமதியாயிருக்கின்றன. இவற்றிலே பெரும்பாலானவை இந்தியாவிலிருந்தே இறக்குமதியாயின.


"காயகல்ப"
அநுகூல சிகிச்சை

காயசித்தி, தத்துவக்குறைவு, சலரோகம், வாதம், சிறுபிள்ளை வாதம், வலி, தோற்புரை வியாதிகள், குட்டம், ஆதியாம் நோய்களுக்கு அநுகூலமான சிகிச்சை.

மேகராசா

சலரோகம், நீரழிவு ('அல்புமென்' அடையல், புளித்திராவகம், அதிக நீரழிவு ஆகிய எந்தநிலையிலிருப்பினும்) க்குக் கைகண்டமருந்து. பத்தியம் இல்லை. 15 நாட்களுக்குக் காணக்கூடிய போத்தல் ஒன்றுக்கு விலை ரூபா 4.00.

சுண்டிக்குளித்தபாற்கத்தோர்த் தலைவர்பின்வருமாறு எழுதுகிறார்:-
நீரழிவுக்குரிய உங்கள் மேகராசா என்னும் மருந்தை நான் ஒரு மாசமாக உபயோகித்தேன். என் சலம் சுத்தமாகி விட்டது. இந்தச் சிகிச்சைக்காக உங்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்,

இங்ஙனம்,
P. நடராஜா.

பின்வருவோரைக் கலந்தாலோசியுங்கள்:—

டக்டர் K. T. மங்களம்
R. I. M. P.
(சென்னை)
M. S. V. S. அங்கத்தவர்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
Q 82 7-8—6.11.41


## தேகவியோகம்

### ஸ்ரீமதி. சின்னம்மா

சாவகச்சேரியைச் சேர்ந்த பொன்னம்பலபிள்ளை ஆறுமுகம் கைம்பெண் சின்னம்மா என்பவர் சிலநாட்களாகத் தம்மைப்பிடித்த நோய்காரணமாகச் சென்ற 21-8-41 வெள்ளிக்கிழமை பகல் 12 மணியளவில் சாவகச்சேரியிலுள்ள சமது இல்லத்தில் தேகவியோகமாயின செய்தியை அறியலானோம். இவர் இறக்கும்போது வயது 82. அடுத்தநாள் (சனிக்கிழமை) பல சனர் சமூகத்தில் இவரது சமக்கிரியை சன் சாவகச்சேரியைச்சேர்ந்த "கன்னடிப்பிட்டி" மயானத்தில் மிகுந்தசிறப்பாக நடைபெற்றது. சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் (Drieberg College) ஆசிரியராகக்கடமைபார்ப்பவரும்பொது சனசகாயருமாகிய ஸ்ரீமான். செல்லையா அவர்களும், தங்காலம் இந்தியாவில் வதியும் சிற்றம்பலமென்பவரும் இவரது உத்தம புத்திரராவர். இவரைப் பிரிந்து வருந்தும் மக்கள் சுற்றமித்திராதியர்க்கு எமது அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இவரது ஆன்மா சாந்தியடைவதாக.

*

### ஸ்ரீமான். K. தம்பையா

பருத்தித்துறையைச்சார்ந்த அல்வாய் தெற்கைச் சேனைபதியாகக் கொண்டவரும் தங்காலம் மட்டக்களப்புப் புளியந்தீவில் சிறவுண் புறொக்டராய்க் கடமைபூண்டு J. P. U. M. பட்டம் பெற்றவரும் ஆகிய ஸ்ரீமான் K. தம்பையா அவர்கள் சடுதியான சுரநோய்காரணமாகச் சிவபதி என்னுந்தமது கிருகத்தில் தமது 51-ம் வயதில் ஆவணிமாசம் 8-ந் தேதி வெள்ளிக்கிழமை மனைவி மக்கள் உறவினர் ஆற்றொணாத் துயருற இறைவன் பதமடைந்தார்.

இவர் அச்சுவேலி திரு. K. நடராசா அவர்களுக்கும், கோலாலம்பூர் இந்தியர்க்கந்தோர் கேந்திளார்க் திரு. K. சந்தையா M. C. H. அவர்களுக்கும் சுற்றுப்பாக் கேந்திளார்க் திரு. S. வேற்றிவேல் அவர்களின் பாரியார் ஸ்ரீமதி தங்கம்மாளுக்கும் நெல்லியடி அரசினர்பாடசாலைத் தலைமையாசிரியர் A. கணபதிப்பிள்ளை அவர்களின் பாரியார் ஸ்ரீமதி செல்லம்மாளுக்கும் சகோதராவர்.

இவரின் அகாலமறைவையிட்டுத் துன்புறும் உறவினர்க்கு எமது அனுதாபம் உரித்தாகுக.

கடித

## திருச்சிரேடியோ நிகழ்ச்சி

(மீ 396)

திங்கள் செப்டம்பர் 1

காலை: 7-30 நிகழ்ச்சியாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 சபையுரம் சுந்தரேசன் நாகஸ்வரம் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 குன்னக்குடி வெங்கடராமையர் (இசைத்தட்டு) 8-35 டி. என். மாணிக்கம் (இசைத்தட்டு) 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 கிளாரினம் (இசைத் தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஸ்ரீமதி சக்தரி பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

(தொடர்ச்சி ௬-ம் பக்கம்

## யானைக்காவல் நடத்த யோசனை

வன்னிகாற்பற்றிலே உணவுப் பயிர்களைச் சேதப்படுத்தி வருகின்ற யானைகளைப் பிடிப்பதற்காக வடமத்திய மாகாணத்தில் யானைக்காவல் ஒன்றை நடத்த உத்தேசித்திருப்பதாக வடமேல மாகாணத் தலைவர் தெரிவித்திருக்கின்றார். சமீபகாலத்திலே அப்பகுதியில் யானைகள் வெகுவாக அதிகரித்திருப்பதாய் அறிக்கையிடப்பட்டிருக்கிறது. அக்வனம் யானைக்காவல் பொன்று நடத்தமிடத்து ஐந்து அல்லது ஆறு வாரம் வரையிலே இரண்டுமாச காலத்துக்கு மேலாகொள்ளப்படவேண்டி வருமென மதிப்பிடப்படுகிறது. காவல் நடத்த ஏற்படுஞ் செலவுகளைப் பிடித்த யானைகளை விற்றுவரும் ஆதாயப்பணத்தைக் கொண்டும், காவல் நடக்கும்போது காட்சிபார்க்க வருகிறவர்களிடம் வசூலிக்கும் கட்டணப் பணத்தைக்கொண்டும் சரிப்படுத்த முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. என்றாலும் இவ்விஷயம் இன்னமும் ஆலோசனையிலேயே இருந்து வருகிறது.

## மட்டக்களப்பிற் சுப்பிறீங்கோடு

மட்டக்களப்பு, ஆ 26

இம்மாகாணத்தின் இரண்டாவது சுப்பிறீம்கோட்டு விசாரணை செவ்வாய் தினம் மட்டக்களப்பு டிஸ்ட்ரிக்கோட்டில் நீதிபதி மிஸ்டர் ... முன்னிலையில் ஆரம்பமாகிறது. மட்டக்களப்பிலிருந்து மூன்றும், திரிகோணமலையிலிருந்து இரண்டுமாக மொத்தம் ஐந்து வழக்குகள் விசாரணைக்குக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

# தி மலாயன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க் கொம்பனி)

இரும்பு, பித்தளைச்சாமான்கள், சீமேந்து வகைகள் விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்.

"புரொப்ரைட்டர்" K. A இரத்தினசிங்கம்

Y 19. 4.3.41—3.3.41





# மெலிந்து சோர்வுற்று பலமிழந்து ஊக்கமற்று இருக்கும் சகலருக்கும் ஓர் விசேஷச் செய்தி

ஜீவாதார உலோக சத்துக்களடங்கிய இந்தச்சிறந்த சாதனம் உங்களுக்குப்புதிய ஆரோக்கியமும் ஊக்கமும் பலமும் அளிக்கும்

பழனி சி. எம். சாமி அசல் தங்கபஸ்பத்தை இன்று முதலே சாப்பிட்டு வாருங்கள். உஷ்ணம், மேகம், கடுப்பு, மூலம், சீரிழிவு, வாதம், நோய்வு, க்ஷயம், குன்மம் இவைபோன்ற பழைய எல்லா நோய்களும் நீங்கி விடும். கண்டிப்பாகப் பலனடைவீர்கள், தேகம் பூராவும் புது ரத்தம் பாயும். பசி ருசியுண்டாகும். நரம்புகள் வலுவடையும், கண்கள் பிரகாசமடையும். சிங்கள் வாலிப பலமும் தேக திடகாத்திரமும் அடைவீர்கள்.

24 நாள் பஸ்பம் விலை ரூபா 10

தலைமை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S I

கிளை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை சுந்தரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்

Y221 31-3-41—30.3.42



# யாழ்ப்பாண ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134.36700**

**100** ரூபா விகிதமான **8000** பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சந்தி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறப்பர்.

Y 58 A. 21-11-40—20-11-41 (தி)



### விளம்பர விகிதம்

முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 10.00 அரைக்கலம் ரூபா 6.00
கா கலம் ரூபா 4.00 ஒரு அங்குலம் ரூபா 1.00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

காலம் கடந்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜருடன் சேர்ந்து கண்டோ எழுத்து மூலமாகவோ ஒழுங்கு செய்பவரும் உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

### பத்திரக்கிரயம்

வருஷம் ஒன்றுக்கு பத்திரங்கள் தபாற்கூலிமுட்பட
தமிழ் ரூபா 6-00 இங்கிலீசு தமிழும் 9.00
இலங்கை இந்தியா 8.00 இங்கிலீசு தமிழும் 12.00
தொடுவாய் பகுதி 9.00 இங்கிலீசு தமிழும் 13.00

தனிப்பிரதி சதம் 5

முற்பணமாக அனுப்பப்படல் வேண்டும்



# N. வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

கட்டிடங்களுக்கு வேண்டிய முதல்தரமான சாமான்கள் ஜெர்மனி, ஜப்பான், டச்சு முதலிய இடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள சீமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள் வர்ணங்கள், வார்னிஸ், கொழுக்கி ஓடுகள் இன்னும் கட்டிடத்திற்குரிய சகலசாமான்களும் எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால் சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE
38, 3rd Cross Street,
Colombo.

Telephone No. 30.

(Y 20— 1-4-41—31-3-42) தி


## கடைப் பிரமாணம்

1-ம் பக்கத்தொடர்ச்சி

கடைகளில் நின்று வேலை செய்வோர்க்கு ஆறுதல வேண்டும். அவர்கள் வேலை செய்யும் மணித்தியாலம் கட்டுப்படுத்தவேண்டுமென்பது நீதியான கோரிக்கையென்பதை நான் மறக்கவாயில்லை. இப்படியான கட்டுப்பாடுகள் வேறு நாடுகளில் இக்காலத்திலே கைக்கொள்ளப்படுகின்றன. கடைகளிலுள்ள தொழிலாளர்களின் நேரத்தை இத்தனை மணித்தியாலந்தான் வேலை செய்யலாமென்று கட்டுப்படுத்தலாம். வருடத்திலே இத்தனை நாள் விடுதலை யென்று விதிக்கலாம். இதனை விடுத்துக் கடைகளில்நின்று வேலை பார்க்கும் சிலரின் வசதியை மாத்திரம் உத்தேசித்துக் கடைகளைப் பூட்டிவிடுவதென்றால் அது பொருத்தமா? நியாயமாகுமா? ஒருவருக்கு ஒருகாலிலுள்ள விரலில் இரணம் உண்டாய் விட்டதென்று நியாயத்தினல் அதனைவெட்டிச் சிகிச்சை செய்யவேண்டிய பரிகாரி, அங்ஙனஞ் செய்தலை விடுத்து அந்த இரணமுண்டவருடைய இரண்டு காலகளையும் கழற்றி வைத்தியஞ் செய்வதுண்டா? இக்கடைச்சட்டமும் அதுபோன்றதுதான்.

## வாணிக உலகு

(முதலாம் பக்கத்தொடர்ச்சி.)

யோசனத்தையும் அடைந்து வந்ததாகவும் தெரிகிறது. காளடைவில இவர்களின் முயற்சி அதிகரித்துக் கடனைக் கோரும் ஆட்களின் அந்தஸ்து செல்வாக்குக்குத் தக்கவாறு புதுவகையான கடன் கொடுக்கும் மார்க்கங்கள் பழக்கத்திற் கொண்டு வரப்பட்டன.

4. இந்தியாவிலும் ஒரு வகுப்பினர் முதன்முதலாக இத் தொழிலைச் செய்து வந்தனர். அவர்கள் செட்டிமார்களாவர். 'செட்டு' என்னுங் கிளிருந்து வந்தது செட்டியார் அல்லது செட்டிமார். செட்டு என்றால் வாணிகத்திறமை செலவிடுதல். இத்தன்மை செட்டிசாதிக்குடன் பிறந்ததாகவே சொல்லலாம். இவ்வினத்தாரைச் சீர்மையிலுள்ள 'ஜயு' வடஇந்தியாவில் காணப்படும் 'மார்வாரி' இனத்தார்களுக்கு ஒப்பிடலாம்.

5. செட்டிமார்களின் தொழில் வியாபாரமும் பண லேவாதேவியுமேயாகும். செட்டிமார்கள் பல கிளைகளாகப் பிரிந்து தொழில் நடத்தி வர முயன்றதால் நாட்டுக்கோட்டைச் செட்டியெனப்படு ஒருகிளையாக ஏற்பட்டது. இச் சமூகம் சிறிதானபோதிலும் அவர்களுக்குள் ஒற்றுமை பலமாகவிருந்தது. இவர்களிடம் தனம் அதிகமாக இருந்தது. இச் சமூகத்திற்கு அடுத்தபடியாகக் 'கோமுட்டி' எனும் வகுப்பைக் கூறலாம். இவர்கள் விசேடமாகச் சென்னப்பட்டணம் — Madras—டெக்கணம்—Decan, மைசூர்-Mysore முதலிய இடங்களில் பலவகை வியாபாரத்தைச் செய்து வருகிறார்கள். முக்கியமாக மைசூர் டெக்கணம் முதலான பிரதேசங்களில தனந்தகளை நடத்திவருகிறார்கள் கோமுட்டிகள் அக்கரை வியாபாரத்தில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை இவ்வினத்தார் பல இடங்களில கூட்டங்களை வைத்துத் தொழில் செய்து வருகிறார்கள்.

6. தனந்த ஸ்தாபனங்களை— Banks—நடத்தி வருவதில நாட்டுக்கோட்டைச் செட்டிகள் பிரசித்திபெற்றவர்கள். பேறும் அக்கரைச் சீமைகளிலும் தனிகாரமாகவும் வைத்தியம் லேவாதேவித் தொழிலைச் செய்து வருகிறார்கள். இவர்கள் நடத்தும் தொழில்கள் கூட்டுத் தொழில்லாகவே காணப்படுகின்றன.

7. காலஞ் சென்றதும் நாட்டுக் கோட்டைச் செட்டிமாரும் தொழில் பஞ்சாப்—Punjab தேசத்தைச் சேர்ந்த முல்டானியர்—Multanees—கைக்கொள்ள ஆரம்பித்து வெகு இடங்களில் லேவாதேவியை விரிவாகச் செய்து வருகிறார்கள்.


### விசேஷ அறிவித்தல்

சம்பூரண கைரேகை பலன், ஆருடம் (சித்திரை சாஸ்திரம்) முதலிய சாஸ்திர சம்பந்தமான எல்லா விஷயங்களையும் கீழ்க் காண்பவரிடம் அறிந்து கொள்ளலாம்.

கிரகஸ்புடம், தச வர்க்கம், அஷ்டவர்க்கம், பாவகிலை முதலிய கணித வகைகளும், மகா தெசா புத்தி பலன், துவாதச பாவபலன், கோசரபலன், காலசக்கரபலன் முதலியன அடங்கிய பெரிய ஜாதகம் எழுத ரூபா 10/—

நா. சின்னத்துரை
போக்கத்தை,
கைதடி வடக்கு, கைதடி.

Y 67 20-7.41—19-7.42


## திருவள்ளுவர் சமயம்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

எனவருமாற்றுல அறிந்து கொள்ளலாம்.

இனிச் சிலர் திருவள்ளுவரை ஆசிவகம் சிகண்ட, உருவ பிரிவுகளையுடைய சைவசமயத்தவரெனக் கூறுகின்றனர். அவர்கள் கூறுமாறு, 'ஆசிரியர் திருவள்ளுவர் வழங்கிய கடவுட் பெயர்களெல்லாம் அருகனுக்குரிய பெயர்களாதலால், அவமன் மலர்மிசை ஏகினன்' என்பது அருகனுக்கே சிறந்து தோன்றுகலாலும், சைவசமயத்தினரால் சிறந்த அறமெனப் போற்றப்படுகின்ற கொல்லாமையையே நியாயமுறைகளாகத் திருவள்ளுவரும் கூறுகின்றமையானும், அச்சைனசமயப் புலவர்களால் இயற்றப்பெற்றதெனப் பிறகாலத்தார் கொள்ளப்படுகின்ற சீவகசிந்தாமணி முதலிய நூல்களிற் கூறப்படும் கருத்துக்களோடு திருக்குறளின் கருத்து ஒத்திருத்தலினாலும் ஆசிரியர் திருவள்ளுவரை சைனசமயத்தவரெனக் கொள்ளுதலே பொருத்தமுடைத்தாகும் என்பது. மற்றைய கூற்றுக்கள் பொருந்தாமையைத் தெரிப்பாம். எங்ஙனம்?

வைணவ சமயத்தினர்கள் உலகம் ஒருவனும் ஏற்றப்படுகின்றதென முறைக்கடர். இதனை 'மூவா முதலாவுலகம் ஒரு மூன்றும்' என வருஞ் சிந்தாமணிச் செய்யுளால் உணர்ந்து கொள்ளலாம். ஆதலின் 'ஆதிபகவன் முதற்றே யுலகு' எனக் கூறி உலகம் ஒரு பரம் பொருளால் முழுமுதற் கடவுளொருவன் உண்டெனக் கொண்ட திருவள்ளுவர் கருத்தோடு முரணுதல் காண்க. 'இரந்து முயிர் வாழ்தல் வேண்டிற் பரந்து கெடுக உலகியற்றியான்' எனக் கூறியிருக்கின்றவாற்றுல இஃது நன்கு வலியுறுகின்றது.

இனி திவுமன்றிச் சைனசமயத்தினர்கள் வேதம வேள்வி பிராமணர்களையும் மிகவும் இகழ்வர். இதனை நீலகேசி மேலைச் சருக்கத்திற் காணலாம். சிந்தாமணியும் 'வேள்வியாய்க்கண்படுத்தும், நல்லப் பிதிட்டார் நமரல்லாதாரென்லார்' எனக் கூறப்படுகின்றது. 'வேதவேள்வியை நிந்தனை செய் துழலாத திலசியமணர்' என்பது பெரியபுராணம். இதனை 'அந்தணர் அறகு மறத்தற்கு மதி மதியாய் நின்றது மனவியன் கோல்' ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர் காவலன் காவானெனின்' மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்' எனவுங் கூறுகின்ற பொருண்மொழிகளால் ஆசிரியர் திருவள்ளுவர் வேதங்களையும் அதனைப் போற்றுகின்ற அந்தணர்களையும் சிறந்தடுத்துப் போற்றுகின்ற கொள்கையினராதலைக் காணலாம். சைனர்கள் 'பாரப்பன வேதத்து என்றற்கொடுக்கத்துச் சேர்க்கச் செயபுனிறல் பார்ப்பார் சேர்தலும் அதனைக் கூறப்பட்ட அறமும் தமக் குடன்பாடன்மை கூறுவர்.

மற்று ஆசிரியர் திருவள்ளுவர் அந்தணரை யக தொழிலோர் எனக் கூறியருளியமையால் வேள்வியை வற்றாகக் கொண்டாரெனல் சொல்லாமலேயமையும். எங்ஙனம்? அந்தணருக்குரிய ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல், எனும் அறுதொழில்களில் வேள்வி வேட்டலும் ஒன்றாதலின் அந்தணமாரின் 'அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று' என வேள்வியை இழித்துக் கூறினாரெனின் அன்று. அவர் ஒழுக்கங்களை மறைவழக்கோடொப்ப உரைக்கின்றாராதலின் துறந்தார்க்குச் சிறந்த அறமாகிய புலால் மறுத்தலின் இன்றியமையாமையை வலியுறுத்துதற் பொருட்டு, அவி சொரிந்து ஆயிரம் வேள்வி வேட்பதினும் வீடு பேற்றின் பொருட்டு நிலையாமையை அஞ்சித் துறந்தார்க்கு ஒன்றனை உயிர்செகுத்துண்ணாமையாகிய அறம் நன்று எனக் கூறியருளினர். இது கொண்டே ஆசிரியர் பரிமேலழகரும், 'இல்லறத்துச் செல்வமாவது தாமும் தேவராய்த் துறக்கத்துச் சென்றெய்துஞ் செல்வம். அது சிறிதாகலானும் பின்னும் பிறத்தற்கேதுவாதலினுலும், வீடாகிய சிறப்பின்ப மெய்தலின் வார்க்குக் கடையெனப்பட்டது. துறக்கமெய்துவார்க்காமாயினும் வீடெய்துவார்க்காகாதென்றமையின் விதிவிலக்குகள் தம்முண் மலைவாமை விளக்கியவாறாயிற்று' எனக் கொல்லாமையில் வருகின்ற 'நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக் கொன்றாகு மாக்கங் கடை' எனுங் குறளின் அகலவுரையகத்துக் கூறினரெனக. இன்னும் மேலே காட்டிய 'அவிசொரிந்து' என்ற குறளின் அகலவுரையினும் ஆசிரியர் பரிமேலழகர் 'அவ்வேள்வியான் வரும் பயனினும் இவ்விரதத்தான் வரும் பயனே பெரிதென்பதாம்' எனவுங் கூறியிருக்குமாற்றுன் இக்கருத்து வலியுறுகின்றது. இதனல் வேள்வி வேட்டால் தாமுந் தேவராய்த் துறக்கத்தின்கட் சென்றின்ப மெய்துவார்க்கமையுமென்பதும் அவ்வேள்வியினகட் பெறும் பேற்றினும் சுற்றில் இன்பத் தருவதாகிய வீட்டினை யெய்துவான் துறந்து அருளறம் பூண்டார்க்குப் புலால் மறுத்தலாகிய தலையான அறமே மிகவும் இன்றியமையாது வேண்டப்படுவதொன்றெனவும் வலியுறுத்ததாலே ஆசிரியர் திருவள்ளுவரின் கருத்தாதல் தெளிவித்திற் புலனுகின்றது. ஆகவே இது காறுங் காட்டிய ஏதுக்களான் 'அவி சொரிந்து' என்றற்றொடக்கத்துக் குறளினுலே ஆசிரியர் திருவள்ளுவர் வேள்வியினை யிழித்துக் கூறினரெனப் பொருள் கொள்ளல் பொருந்தாமை நன்கு வலியுறுகின்றது.

—வரும்

## திருச்சிரேடியோ நிகழ்ச்சி

(மீ 395)

3-ம் பக்கத்தொடர்ச்சி

மாலை: 5-00 சமயபுரம் சுந்தரேசன் நாதஸ்வரம் 5.45 இசைப்பயிற்சி 6.00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 ஸ்ரீமதி சுந்தரி பாட்டு 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 அசோக்-குமார் (இசைத்தட்டு) 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் ரேடியோக்கச்சேரி 7-50 மதுரை மாரியப்பசாமி பாட்டு டி. என். சம்பந்தம் பிள்ளை வயலின் தஞ்சை எஸ். ராமதாஸ் ராவ் மிருதங்கம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும், சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு.

### செவ்வாய் செப்டம்பர் 2

காலை: 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 எல். வெங்கடசுப்பையர் வீணை 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 நக்ஷத்திர பவனி (இசைத்தட்டு) 9-00 ஒலிபரப்பு முடிவு

1 00 பிடித்த குரல்கள் (இசைத்தட்டு) 1-15 செம்பை வைத்தியநாத பாகவதர் (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 திருநெல்வேலி என். குத்தாலலிங்கம்பிள்ளை பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2 05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு

மாலை: 5-00 எல். வெங்கடசுப்பையர் வீணை 5-15 இசைப்பயிற்சி 6.00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 திருநெல்வேலி என். குத்தாலலிங்கம்பிள்ளை பாட்டு 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 சமயத்தமுயற்சி பேச்சு 7-15 பாதிமதி சிறு நாடகம் 7-30 அறிவிப்புகள் 7.35 தமிழில் செய்திகள் 7-50 மதராஸில் உள்ளபடி (ஆலத்தூர் சகோதரர்கள் பாட்டு) 8-15 இடைவேளை (இசைத்தட்டு) 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும் சொற்பொழிவுகளும் 10-00 ஒலிபரப்பு முடிவு.

### புதன் செப்டம்பர் 3

காலை: 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 சோஷ்டிகானம் 8-00 மதராஸில் உள்ளபடி (இரண்டு வருஷ யுத்தம் பேச்சு (ஆங்கிலம்) 8.15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 கதம்பம் (இசைத்தட்டு) 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 திரைகானம் (இசைத் தட்டு) 1-30 ஆங்கிலத்தில செய்திகள் 1-35 ஸ்ரீமதி கல்பகம் நாராயணன் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2 05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை: 5-00 வாத்தியகீதம் 5–15 எம். என். நடராஜ பிள்ளை புல்லாங்குழல் 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கல்பகம் நாராயணன் பாட்டு 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 டி.கே. பட்டம்மாள் (இசைத்தட்டு) 7-15 இரண்டு வருஷ யுத்தம்; பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 3-9-1939—3-9-1941 இரண்டாவது உலக யுத்த சித்திரம் ஹிட்லரியத்தை எதிர்க்கும் போராட்டத்தின் கதை 8-30 டெல்லியில் உள்ளபடி 8-45 மதராஸில் உள்ளபடி (மஹாயுத்தம்— 1940-41 — ஆங்கிலநாடகம்) 9-15 இடைவேளை (இசைத்தட்டு) 9 20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும் சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு.

### வியாழன் செப்டம்பர் 4

காலை: 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 ஸ்ரீமதி வி. எஸ். சாரதாம்பாள் பாட்டு 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8.25 டாக்கிப் பாட்டுக்கள் (இசைத்தட்டு) 9.00 ஒலிபரப்பு முடிவு

1-00 குரல்வகைகள் (இசைத்தட்டு) 1-20 அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஸ்ரீமதி வி. எஸ். சாரதாம்பாள் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை: 5-00 எ. மருமகத் தாஜுப்பாட்டு 5-45 இசைப்பயிற்சி 6 00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 எ. மருமகத் தாஜுத் பாட்டு 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 கடைமுதல் நிகழ்ச்சி 7-15 தண்டனைமுறை 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 கும்பகோணம் ராஜமாணிக்கம்பிள்ளை வயலின் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும் சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு.


வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன் வீவிங் மில்ஸின்

# புடவைகள்

இப்போது யாழ்ப்பாணத்திலொவ்வொருவீட்டிலும் பேசப்படும் வார்த்தைகளாம்

ஒருமுறை பரீக்ஷித்தால்— எப்போதும் விரும்பப்படுவது.

ஒவ்வொருவிதமான இனிசிலும் நாம் புடைவைகளைச் செய்கிறோம்.

| | |
|---|---|
| வேட்டிகள் | டிரில்லுகள் |
| சால்வைகள் | சூற்துணிகள் |
| சேலைகள் | ரசூர்கள் |
| சாரங்கள் | 'ஷேட்' துணிகள் |
| கப்பாய்கள் | ஷீட்டுகள் |
| துவாய்கள் | பஞ்சணை உறைகள் |
| லோங்குளோத்ஸ் | மேசைத்துணிகள் |
| மல்லுகள் | பப்ளின்கள் |
| பெட்ஷீட்டுகள் | யன்னல்துணிகள் |

முதலிய இன்னும்பல எம்மிடம் உண்டு.

எங்கள் சில்லறைக் கடைக்கு வாருங்கள்.

பெரியகடை, யாழ்ப்பாணம்.

வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன் வீவிங்மில்ஸ்,
(இந்தியாவில் ஸ்தாபிதமானது):
(அங்கத்தவரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

Mis 127, 11-10-40—



# புதிய வெளியீடுகள்

சிவிக்ஸ் (Civics) எனப்படும்

# குடி இயல் நூல்

இலங்கை வித்தியாபகுதியாரால் அங்கீகரிக்கப் பெற்றவை.

(அங்கீகார இலக்கம். 21 A & B / 41 திகதி 3-7-41)

6-ம் வகுப்புக்குரிய முதற்புத்தகம் விலை சதம் **50**

7-ம் வகுப்புக்குரிய இரண்டாம் புத்தகம் விலைசதம் **50**

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைப் பிரசுரமாக அச்சிடப்பட்டுள்ளன.

மானேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,
யாழ்ப்பாணம்.



விளம்பரமின்றேல் பெரும்பணமில்லை



# S. S. C. பரீக்ஷை இலக்கியம் (1941)

# பாரதம்-கிருஷ்ணன்றூது சருக்கம்

மூலமும் உரையும்

பல வருடங்கள் J. S. C.; S. S. C. பரீட்சை இலக்கியங்களுக்கு விசேடமாகிய உரைநூல்கள் இயற்றி வெளியிட்டவரும், பண்டித, பாலபண்டித; பரீட்சைக்ஷ வகுப்புக்களுக்குப் போதித்த அநுபவம் வாய்ந்த இயற்றமிழ்ப் போதகாசிரியரும், வண்ணார்பண்ணை-நாவலர் வித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய திரு. வித்துவான், ந. சுப்பையாபிள்ளை அவர்கள் மேற்படி பரீட்சைக்ஷக்காகிய முறையில் இயற்றிய விசேட விரிவுரையுடன் அச்சிடப் பெற்றுள்ளது.

பிரதி எம்மிடத்திலும் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**பிரதியொன்றன் விலை ரூபா 1 சதம் 10**

தொகையாக வாங்கும் ஆசிரியர்களுக்கும் வியாபாரிகளுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்

இந்துசாதனம் 20-8-40

மனேஜர்.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.


Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday September 1st 1941.